மலேசிய நண்பன்
மக்கள் ஏடு HARIAN TAMIL MALAYSIA NANBAN
1 July 2020 (Wednesday)

## கோவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு

# வீடு, நில வரிகளை 50% குறைக்க வேண்டும்!




★ ரத்ததானத்தின் போது டத்தோ லீ தியான் ஹோக் மற்றும் டத்தோ லோகந்திரன்

(துர்க்கா)

சிரம்பான், ஜூலை 1- கோவிட் -19 தொற்றால் பாதிக்கப்பட்ட மாநிலத்தைச் சேர்ந்த நோயாளிகளின் வீடு, நிலம், அடுக்குமாடி குடியிருப்பு வீடுகளுக்கு மாநில அரசு 50 சதவீதம் தள்ளுபடி வழங்க வேண்டும்.

சிரம்பான், ராசா மாவார் தனியார் மருத்துவமனை ஏற்பாடு செய்த ரத்த தான நிகழ்விற்கு வருகை தந்த மெட்ரிக்ஸ் கான்செப்ட்ஸ் ஹோல்டிங்ஸ் பெர்ஹாட் மேம்பாட்டு நிறுவன குழுமத்தின் நிர்வாக துணைத் தலைவர் டத்தோ லீ தியான் ஹோக் இவ்வாறு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

குறைந்த வருமானம் கொண்டுள்ள பி 40 மற்றும் எம் 40 ஈட்டுபவர்களின் நிதிச் சுமையைக் குறைக்க குறைந்தபட்சம் மூன்று வருட காலத்திற்கு இந்த 50 சதவீதம் வரி சலுகை குறைக்கப்பட வேண்டும் என்ற ஆலோசனையை அவர் முன் வைத்தார்.

மாநிலத்தில் வீடு, நில உரிமையாளர்கள் எம்40 மற்றும் அதற்கும் குறைவான வருமானம் பெறுவதை கொண்டிருப்பதால் மக்கள் நலன் கருதி மாநில அரசு இந்த விவகாரத்திற்கு உதவ வேண்டும் என்றார் அவர்.

கோவிட் -19 தொற்றின் போது 3 மாதங்கள் வீடு, நிலம் உட்பட வணிகம் செய்பவர்களும் பாதிக்கப்பட்டிருப்பதால் இந்த வரிக் குறைப்பை மக்கள் வரவேற்க வகை செய்யும் என அவர் சுட்டிக் காட்டினார்.

இதனிடையே, மாவார் தனியார் மருத்துவமனையில் மெட்ரிக்ஸ் கான்செப்ட்ஸ் அறவாரியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் டத்தோ லோகந்திரன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட ரத்ததான நிகழ்வை தொடக்கி வைத்த அவர், ரத்தப் பற்றாக்குறையை எதிர்நோக்கும் அரசாங்க மருத்துவமனைக்கு உதவும் நோக்கத்தில், இத்திட்டம் தொடங்கப்பட்டது என்று இதற்கு முன் குறிப்பிட்டார்.